# தியானம் செய்யும் முறை






(சாமி புத்தகம் - தெளிந்து வாழ்ந்திட குருவின் அருள்ஞானம்)
(பக்கம் 79-89)

"ஓ....ம் ஈஸ்வரா குருதேவா"

"அம்மா அப்பா அருளால், மாமகரிஷி ஈஸ்வராய குருதேவர் அருள் சக்தியால், அகஸ்தியர் துருவனாகி, துருவமகரிஷியாகி, துருவ நட்சத்திரமான அந்த பேரருளை பெற வேண்டும்"

என்று உங்கள் உயிரான ஈசனிடம், அந்த ஆறாவது அறிவை வைத்து, உங்கள் எண்ணத்தை செலுத்துங்கள். இப்பொழுது

**“குருவின் அருளால், துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் நாங்கள் பெற அருள்வாய் ஈஸ்வரா”**

என்று **கண்ணிலே ஏங்கும் பொழுது, அந்த கண்ணிலே ஈர்க்கும் சக்தி வரும்.** கொஞ்சம் கனமாக இருக்கும். மெதுவாகக் கண்களை மூடுங்கள்.

**”குருவின் அருளால், துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் நாங்கள் பெற வேண்டும்”**

என்று உங்கள் உயிரான ஈசனிடம் வேண்டி ஏங்கி தியானியுங்கள். இப்பொழுது உயிர் வழி, அந்த துருவ நட்சத்திரத்தின் பேரொளியை நீங்கள் ஏங்கிப் பெறும் பொழுது, உயிரின் பாகம் அது வலிமை பெறுகின்றது. இப்பொழுது அதை எடுத்து உயிரின் பாகம் வரும் பொழுது ‘ஓ...ம்’ பிரணவம், ஆக, துருவ நட்சத்திரத்தின் இயக்கமாக, நம் உடலிலே மாறுகின்றது.

நமது உடலில் உள்ள தீமையான அணுக்களுக்கு, ஆகாரம் மூக்கின்வழி சென்றுதான் சேருகின்றது. இப்பொழுது அங்கு போகாதபடி தடைப்படுத்துகின்றோம். இப்பொழுது உயிரிலே, அந்த துருவ நட்சத்திரத்தின் சக்தி மோதும்போது, அந்த உணர்வின் அறிவு, உங்களுக்குள் இயக்கமாக ஆகப்படும்போது, அந்த ஈர்க்கும் சக்தி கிடைக்கின்றது. ஒரு நிமிடம் ஏங்கி தியானிப்போம்.

**“குருவின் அருளால், துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் எங்கள் இரத்த நாளங்களில் கலந்து. எங்கள் உடலில் உள்ள ஜீவ அணுக்கள், ஜீவ ஆன்மாக்கள் பெற அருள்வாய் ஈஸ்வரா”**

நாம் எதை எண்ணினாலும், அந்த உணர்வுகள், நமக்குள் இரத்தமாக மாறி, ஜீவ அணுவாக மாறுகின்றது. அப்போது அந்த ஜீவ அணுவிற்கு, நாம் கண்ணின் நினைவு கொண்டு, அது செயல்படுத்தும் பொழுது, அந்த தீமை

என்ற நிலை உருவாகாதபடி தடுக்கின்றது. தீங்கு செய்ததும் அணுவாக வருகின்றது. அதை எண்ணும்போது, நமக்குத் தீமை விளைவிக்கின்றது. நல்லது செய்ததும் அணுவாக வருகின்றது. அது நமக்கு நல்லது செய்கின்றது. ஒருவன் வேதனைப்படும் உணர்வை நாம் நுகர்ந்தால், வேதனைப்படும் உணர்வை உருவாக்குகின்றது. அவ்வுணர்வால் வேதனைப்பட்ட ஒருவனின் ஜீவான்மா, நமக்குள் வந்தால் ஜீவ அணுவாக மாறுகின்றது. ஆனால், அதனால் வேதனையை மாற்ற முடியாது.

**"குருவின் அருளால், துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் எங்கள் உடலில் உள்ள ஜீவ அணுக்கள், ஜீவ ஆன்மாக்கள் பெற அருள்வாய் ஈஸ்வரா"**

என்று ஏங்கி தியானியுங்கள். இப்பொழுது, உங்கள் இரத்தத்தில் புதுவிதமான உணர்ச்சிகள் வரும். இந்த வலிமை பெறும்போது, உங்கள் உடலுக்குள் தீமையை இழுக்கக்கூடிய, உங்கள் ஈர்ப்பு வட்டத்தில் இருக்கும் வெறுப்பு, வேதனை, சலிப்பு, கோபம், இது மாதிரி **எத்தனையோ வகையான தீமையான உணர்வுகளை, உங்கள் உடலின் ஈர்ப்பை விட்டுத் தள்ளிவிடுகின்றது**. உங்கள் ஆன்மா சுத்தமாகின்றது. துருவ நட்சத்திரத்தின் உணர்வுகள், உங்கள் ஆன்மாவில் வலிமை பெறுகின்றது. இவ்வாறு சுத்தப்படுத்திவிட்டு,

**"குருவின் அருளால், துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் எங்கள் சிறுகுடலிலும் பெருங்குடலிலும் கலந்து, சிறுகுடலையும் பெருங்குடலையும் உருவாக்கிய அணுக்கள் அனைத்திலும், குருவின் அருளால், அந்த துருவ**

**நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் படர்ந்திட, அருள்வாய் ஈஸ்வரா”**

என்ற உணர்வினை செலுத்துங்கள். இப்பொழுது சிறுகுடல், பெருங்குடலை உருவாக்கிய அணுக்கள் உற்சாகம் அடையும், உங்கள் குடல்களில் இதற்கு முன்னால் வேதனை, வெறுப்பு, என்ற உணர்வுகள் பட்டிருந்தாலும், அந்த சிறுகுடலில் உள்ள அணுக்கள் வீரியமடையப்படும் பொழுது, குடல் புண்ணோ, குடல் வாதங்களோ, இதைப் போன்ற நிலைகள் இருந்தால் அவைகள் நீங்கி, நல்ல குடலாக சிறுகுடலை உருவாக்க முடியும். அதனால்,

**“துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும், எங்கள் சிறுகுடலையும் பெருங்குடலையும் உருவாக்கிய அணுக்கள் பெற வேண்டும்”**

என்று நினைவைச் செலுத்துங்கள். சிறுகுடல் பெருங்குடல்களில் வாத நீர்கள் இருந்தால், சரியாக ஜீரணிக்க முடியாது. புளித்த ஏப்பங்கள் வரும், குடல் வாதங்கள் வரும், குடல் புண் வரும். இதைப் போன்ற நிலைகளை மாற்றியமைக்க,

**“எங்கள் சிறுகுடலையும் பெருங்குடலையும் உருவாக்கிய அணுக்கள் அனைத்திலும், குருவின் அருளால், அந்த துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் படர்ந்திடவேண்டும்”**

என்று கண்ணின் நினைவை, சிறுகுடலிலும் பெருங்குடலிலும் செலுத்தி, ஒரு நிமிடம் ஏங்கி தியானியுங்கள். இப்பொழுது, அது உற்சாகம் அடைவதை உங்களால் உணர முடியும்.

**“குருவின் அருளால், துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் எங்கள் கணையங்களில் கலந்து, கணையங்களை உருவாக்கிய அணுக்கள் அனைத்திலும், குருவின் அருளால், அந்த துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் படர்ந்திட, அருள்வாய் ஈஸ்வரா”**

இந்த கணையங்களை உருவாக்கிய அணுக்கள் அனைத்தும், துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் பெற வேண்டும் என்று உங்கள் கண்ணின் நினைவை செலுத்தப்படும்பொழுது, அந்த கணையங்களை உருவாக்கிய அணுக்கள் உற்சாகம் அடைவதை, உணர முடியும்.

**"குருவின் அருளால், துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் எங்கள் கல்லீரல் மண்ணீரலில் கலந்து, கல்லீரலையும் மண்ணீரலையும் உருவாக்கிய அணுக்கள் அனைத்திலும், குருவின் அருளால் அந்த துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் படர்ந்திட, அருள்வாய் ஈஸ்வரா"**

என்று ஏங்கி தியானியுங்கள். நாம் சந்தர்ப்பத்தால் நுகரும் வெறுப்பு, வேதனை போன்ற உணர்வுகள் நம் ஆகாரத்துடன் கலந்து, நம் இரத்தத்துடன் கலந்து, இரத்தத்தை சுத்திகரிக்கும் தன்மை விஷத்தின் தன்மையானால், கல்லீரல் மண்ணீரல் விஷத்தன்மையானால், இரத்தத்தை சுத்திகரிக்கும் தன்மை இழந்து, விஷத்தன்மையான அணுக்கள் அதை மறைக்கும் பொழுது, கல்லீரல், மண்ணீரல் வீக்கமாகும். அங்கே வலியும் ஏற்படும். வேதனைப்பட்டோரைக் கண்டால், கல்லீரல் மண்ணீரல்களில் வீக்கம் வருவதைப் பார்க்கலாம். இதைப்போன்ற நிலைகள் வராமல் தடுப்பதற்கு, வெறுப்பு, வேதனை உணர்வு கொண்டவர்களைப் பார்க்கும் பொழுது,

**"துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் எங்கள் கல்லீரலையும் மண்ணீரலையும் உருவாக்கிய அணுக்கள் பெறவேண்டும்"**

என்று ஏங்கி தியானியுங்கள்.

ஏனென்றால் **<u>"இன்ஜெக்சன்" செய்வது மாதிரி</u>**, அந்த அணுக்களுக்கு வீரிய சக்தி ஊட்டும்போது, அந்த விஷத்தை மாற்றியமைத்து, இரத்தத்தை சுத்திகரிக்கும் தன்மை வருகின்றது.

**"குருவின் அருளால், துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் எங்கள் நுரையீரலில் கலந்து, நுரையீரலை உருவாக்கிய அணுக்கள் அனைத்திலும், குருவின் அருளால் அந்த துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் படர்ந்திட, அருள்வாய் ஈஸ்வரா"**

என்று கண்ணின் நினைவை, நுரையீரலில் செலுத்தி அதை வீரியமடையச் செய்யுங்கள். நேரடியாக, துருவ நட்சத்திரத்தின் உணர்வைப் பெற்று, அங்கே நுரையீரலில் செலுத்தப்படும் பொழுது, அது வீரியமடைகின்றது.

இராமாயணத்தில் சொன்ன மாதிரி, ராமனின் பக்தன் ஆஞ்சநேயன், சுக்கிரீவனின் மந்திரி. அந்த துருவ நட்சத்திரத்தின் உணர்வு, நம் சொல்லாக அது தாவிச் சென்று, உங்கள் உடலுக்குள் அந்த தீமைகளை நீக்கும். அந்த உணர்ச்சிகளை ஊட்டி, எங்கே நோய் இருக்கின்றதோ, அங்கே சுக்கிரீவனின் உணர்வுகள், தீமைகளை நீக்கும்.

விஷத்தன்மை கண்டால், வேதனையான உணர்ச்சிகள், இந்த நுரையீரல் வழி தான் சுவாசிக்க நேரும், அப்போது பிறர் உடலில் அதிகமாக நுகர்ந்த விஷத்தின் தன்மை, நம் உடலில் வரப்படும்பொழுது, நுரையீரல் பலவீனமாகி, ஆஸ்மா போன்ற நோயும், சளிக்கட்டிகள் போன்ற தீய விளைவுகளும் ஏற்படும். இதைப் போன்ற நிலைகளைத் தடைப்படுத்த

**"எங்கள் நுரையீரலை உருவாக்கிய அணுக்கள் அனைத்திலும், குருவின் அருளால் அந்த துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் படர்ந்திட, அருள்வாய் ஈஸ்வரா"**

என்று ஏங்கி தியானியுங்கள்.

**"குருவின் அருளால், துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் எங்கள் கிட்னியிலும்**

**சிறுநீரகத்திலும் கலந்து, கிட்னியையும் சிறுநீரகத்தையும் உருவாக்கிய அணுக்கள் அனைத்திலும், குருவின் அருளால் அந்த துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் படர்ந்திட, அருள்வாய் ஈஸ்வரா”**

என்று உங்கள் கண்ணின் நினைவைக் கிட்னியிலும், சிறுநீரகத்திலும் செலுத்துங்கள். இவ்வாறு, அந்த அணுக்களை வலுப் பெறச் செய்தால், உப்புச்சத்து, சர்க்கரைச் சத்து, வாத நீர் போன்ற நிலைகளை, அது சுத்திகரிக்கும். நல்ல இரத்தமாக மாற்றும் சக்தி பெறுகின்றது. இவ்வாறு நல்ல இரத்தமாக மாறி, இதயத்திற்குச் செல்லப்படும் பொழுது, இந்த இதயத்திலிருந்து வீரிய உணர்வுகளை மேற்கொண்டு, **நல்ல அணுக்கள் அனைத்திற்கும், இந்த உடலை இயக்குவதற்கும், மனவலிமை பெறுவதற்கும், நமது சிறுமூளை பாகங்களை அது வீரியத்துடன் இயக்குவதற்கும்,** இந்த உணர்ச்சிகள் பயன்படுகின்றது.

**“குருவின் அருளால், துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் எங்கள் இதயத்தில் கலந்து, இதயத்தை உருவாக்கிய அணுக்கள் அனைத்திலும், குருவின் அருளால் அந்த துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் படர்ந்திட, அருள்வாய் ஈஸ்வரா”**

என்று ஏங்கி தியானியுங்கள். இதயம் பலவீனமடைந்தால், நுரையீரலும், கல்லீரலும் பலவீனமடையும். **இதயத்தை வலுப் பெறச் செய்தால், எல்லா உறுப்புகளையும் சீராக்கும், அந்த உணர்ச்சிகளின் பக்குவம் பெறுகின்றது.** இப்போது உங்கள் இதயத்தில் உள்ள அணுக்கள், வீரியமடைவதை உணரலாம்.

நெஞ்சுவலி, அல்லது பலவீனமான நிலை, கலக்கமோ இருந்தால் அது அகலும்.

**"குருவின் அருளால், துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் எங்கள் கண்களில் உள்ள, கருமணிகளில் படர்ந்திட, அருள்வாய் ஈஸ்வரா"**

என்று உங்கள் நினைவினை கருமணிகளில் செலுத்தி, ஏங்கி தியானியுங்கள்.

நீங்கள் வேதனைப்பட்டதோ, வெறுப்படைந்ததோ, கோபப்பட்டதோ, இந்த கருமணியில் ஈர்க்கப்பட்டுத்தான், **அதன் வழி நரம்பு மண்டலத்தின் மூலமாக, உடல் முழுவதும் பரப்புகின்றது.** இந்த மாதிரி வேதனை, வெறுப்பு போன்ற உணர்வுகளைப் பார்த்தால். அடுத்து, நல்ல பொருளை பார்த்து, சிந்தித்து செயல்படுதல் என்றால் முடியாது. ஒரு பொருளின் தரத்தை நாம் பார்க்க முடியாது. ஒரு மணத்தின் தரத்தை, நாம் நுகர முடியாது.. எனவே நாம் இத்தகைய தீமையான உணர்வுகளைப் பார்த்தபின், அடுத்த நிமிடம் துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் நாம் பெற வேண்டும் என்று எண்ணினோம் என்றால், இந்தக் கருவிழிகள் சுத்தமடைகின்றது.

**"குருவின் அருளால், துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் எங்கள் நரம்பு மண்டலத்தில் கலந்து, நரம்பு மண்டலங்களை உருவாக்கிய அணுக்கள் அனைத்திலும், குருவின் அருளால் அந்த துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் படர்ந்திட, அருள்வாய் ஈஸ்வரா"**

இந்த கருமணி வழிக் கொண்டுதான், வேதனை, வெறுப்பு, கோபம், குரோதம் போன்ற உணர்வுகள் சேர்க்கப்படுகின்றது. நரம்பு மண்டலங்களின் அணுக்களில் இது மாறினால், வாத நோய், சரவாங்கி நோய், மூட்டுவாதம், இதைப் போன்ற நோய்கள் அதிகரித்து விடுகின்றன. துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும், நரம்பு மண்டலத்தை

உருவாக்கிய அணுக்களில் படர வேண்டும் என்று, ஏங்கி தியானிக்கும் பொழுது, அத்தகைய நோய்கள் வராமல் தடுக்கலாம்.

"குருவின் அருளால், துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் எங்கள் எலும்பு மண்டலங்களில் கலந்து, எலும்பு மண்டலங்களை உருவாக்கிய அணுக்கள் அனைத்திலும், குருவின் அருளால் அந்த துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் படர்ந்திட, அருள்வாய் ஈஸ்வரா"

என்று ஏங்கி தியானியுங்கள். இந்த நரம்பு மண்டலம் வழிதான், வாயு மண்டலம் செல்கின்றது. நாம் எண்ணிய உணர்வுக்கொப்ப, விரல்களை அசைப்பதும், எலும்புகளை இயக்குவதும் இதுவேதான். எலும்பு மண்டலத்தின் இயக்கத்தால், ஆவியாக மாறிவிடுகின்றது. அவ்வாறு ஆவியாக மாறி, எலும்பு மண்டலத்தில் உணவாக உட்கொள்ளும்பொழுது, **வேதனை என்ற உணர்வாகிவிட்டால். "T.B." போன்ற நோய்களும், "கேன்சர்" போன்ற நோய்களும் எலும்பு மண்டலங்களில் வந்துவிடுகின்றது.** அதைப் போன்ற நிலைகளை நீக்க, இதை முறைப்படுத்தி வைத்துக் கொள்ளவும்.

"குருவின் அருளால், துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் எங்கள் நெஞ்சின் பாகம் (விலா எலும்புகள்) உள்ள எலும்புகளில் கலந்து, குருத்து எலும்பு முழுவதும் படர்ந்து, அந்த எலும்புகளுக்குள் உறைந்துள்ள ஊன் முழுவதும் படர்ந்து, ஊனை உருவாக்கிக் கொண்டிருக்கும் அணுக்கள் அனைத்திலும், குருவின் அருளால் அந்த

**துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் படர்ந்திட, அருள்வாய் ஈஸ்வரா”**

என்று உங்கள் கண்ணின் நினைவினை, விலா எலும்புக்குள் செலுத்தி, ஊனை உருவாக்கிக் கொண்டிருக்கும் அணுக்கள் பெற வேண்டும் என்று, ஏங்கி தியானியுங்கள். இவ்வாறு செய்வதனால், **துருவ நட்சத்திரத்தின் உணர்வுகள், வேதனையை நீக்கும் உணர்வாக, ஊழ்வினை என்ற நல்ல வித்துக்களை உருவாக்கும் சக்தியாக உருபெறுகின்றது.** ஆகவே நமக்குள் வேதனை, வெறுப்பு, கோபம், ஆத்திரம் என்ற உணர்வுகளை வளராது கட்டுபடுத்த, இது உதவும். அதனால் ஒவ்வொரு நிமிடத்திலும், துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் விலா எலும்புக்குள், ஊனை உருவாக்கிய அணுக்கள் பெற வேண்டும் என்று ஏங்கி தியானியுங்கள்.

இப்பொழுது விலா எலும்புக்குள், ஒரு உற்சாக உணர்வு வரும். உங்கள் ஈர்ப்பு வட்டத்தில், ஒரு மெலிதான வெளிச்சம் வருகின்றது. **உங்கள் நெஞ்சு எலும்புக் கூட்டில், வீரிய உணர்வின் சக்திகள் வளர்ச்சி பெறும் சந்தர்ப்பத்தை, நாம் உருவாக்க வேண்டும்.**

**“குருவின் அருளால், துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் எங்கள் தசை மண்டலங்களில் கலந்து, தசை மண்டலங்களை உருவாக்கிய அணுக்கள் அனைத்திலும், குருவின் அருளால் அந்த துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் படர்ந்திட, அருள்வாய் ஈஸ்வரா”**

என்று ஏங்கி தியானியுங்கள்.

**“குருவின் அருளால், துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் எங்கள் தோல் மண்டலங்களில் கலந்து, தோல் மண்டலங்களை உருவாக்கிய அணுக்கள்**

**அனைத்திலும், குருவின் அருளால் அந்த துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் படர்ந்திட, அருள்வாய் ஈஸ்வரா"**

என்று ஏங்கி தியானியுங்கள். இவ்வாறு, தோல் மண்டலத்தில் நாம் துருவ நட்சத்திரத்தின் உணர்வுகளைச் சேர்க்கும் பொழுது, காற்றில் உள்ள தீமையான உணர்வுகள், நம் அருகில் வராது விலகிச் செல்லும்.

இதைப் போன்ற தியானம், **நாம் காலையில்,** 4.30 **மணியிலிருந்து,** 6.00 **மணிக்குள் ஒரு பத்து நிமிடமாவது இருக்க வேண்டும்.** முடிந்தால் கொஞ்ச நேரம் கூட இருக்கலாம். **இதுதான் "ஏகாதசி விரதம்"** பத்தாவது நிலையை அடையக்கூடிய சக்தி பெற வேண்டும். **தீமைகளை நாம் கவருவது இல்லை**.

இதைப் போன்று காலையில் வீரிய சக்தியை எடுத்தபின்,

**நாங்கள் பொருளறிந்து செயல்படும் திறன் பெற, அருள்வாய் ஈஸ்வரா**

**கனியைப் போன்ற, சுவையான சொல்லும் செயலும், நாங்கள் பெற அருள்வாய் ஈஸ்வரா**

**எங்கள் சொல்லைக் கேட்போர் வாழ்வில், அந்த கனியைப் போன்ற சுவையான வாழ்க்கை, வாழ்ந்திட அருள்வாய் ஈஸ்வரா**

**எங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும், அந்த கனியைப் போன்ற சுவையான வாழ்க்கை, வாழ்ந்திட அருள்வாய் ஈஸ்வரா**

நாங்கள் பார்க்கும் குடும்பமெல்லாம், இந்த நிலை பெற வேண்டும்

நாங்கள் தொழில் செய்யும் இடங்களில் எல்லாம், இந்த நிலை பெற வேண்டும்.

காலையில் எழுந்தவுடன், இவ்வாறு ஆன்மாவை சுத்தப்படுத்திக் கொள்ளுங்கள். **"தங்கத்தைப் போன்று, என் மனம் மங்காத நிலை பெற வேண்டும்"** ஒருவர் கோபித்து விட்டால், அந்த கோபமான உணர்வு, நம் மனதை மாற்றிவிடக் கூடாது. தங்கம் எவ்வாறு நிறம் மாறாதிருக்கின்றதோ, அதைப் போன்று

தங்கத்தை போன்று, என் மனம் மங்காத நிலை பெற வேண்டும்.

எங்கள் குடும்பத்தில் அனைவரும், தங்கத்தை போன்று, மனம் மங்காத நிலை பெற வேண்டும்

வைரத்தைப் போல் எங்கள் சொல் ஜொலிக்க வேண்டும், எங்கள் வாழ்க்கை ஜொலிக்க வேண்டும். என் சொல்லைக் கேட்போர் வாழ்க்கை வைரத்தைப் போன்று ஜொலிக்க வேண்டும்

என்று நாம் நினைக்க வேண்டும்.

என் கணவர் / மனைவி அருள்ஞானம் பெற வேண்டும்.

**என் கணவரைப் /மனைவியைப் பார்ப்பவர்கள் அனைவரும், அந்த அருள்ஞானம் பெற வேண்டும்.**

**அவர்கள் தொழில் செய்யும் இடங்களில், அந்த நிலை பெற வேண்டும்,**
**என்று எண்ணத்தால் படைத்தல் வேண்டும்.**

இதைப் போன்று தொழிலுக்கு போனால், அலுவலகத்தில் குறைபாடு இருந்தாலும் நீங்கும். அவர்கள் எடுத்துக் கொண்ட தொழிலும், நன்றாக இருக்கும், நல்ல பெயரும் வரும். அலுவலகத்தில் குறைபாடு வந்துவிட்டால், அந்த உணர்வுகள் வீட்டில் பதிந்து, இருவரும் ஒருவரை ஒருவர் குறைபாடாக வளர்த்து, அலுவலகத்திலும் கெட்ட பெயராகும். **இந்த முறைப்படி நீங்கள் தியானம் செய்யும் பொழுது, உங்களுக்குள் தீமையை நீக்கும் அணுக்கள் வளர்ச்சியடைந்து, வேதனையை நீக்குகின்றது.**

ஆகவே, **இந்த வாழ்க்கையில் துருவ நட்சத்திரத்தின் உணர்வை எடுத்தால், நீங்கள் எல்லா விதத்திலும் உயர்வு பெற முடியும்.** உங்கள் வாழ்க்கையில் வரும் நோய்களைப் போக்க முடியும்.

அதே சமயம், இந்த வாழ்க்கைக்குப்பின், இந்த உடலைவிட்டு நாம் சென்றால், **எங்கு போவது என்று தெரியும்.** அப்பொழுது, நாம் நம் குழந்தையின் மீது பாசத்தால், இவ்வாறு ஆகிவிட்டானே என்ற உணர்வை எடுக்காதபடி, துருவ நட்சத்திரத்தின் உணர்வைச் சேர்த்து, கணவனும் மனைவியும், அதை மாற்றி நல்ல

நிலை பெறலாம். இந்த உடலுக்குபின், பிறவி இல்லா நிலை பெறலாம். அழியா ஒளிச்சரீரம் பெற முடியும்.



**(பக்கம்** 34, 35)

நம் எண்ணத்தால் உருவாக்கப்பட்டது தான், நமது உடல். இதைத்தான் "**இராமேஸ்வரம்**" என்று வைத்தார்கள் ஞானிகள். நாம் எதை எண்ணினோமோ, அதன் வழிப்படி, இந்த உடலான பரத்தை உருவாக்கியது, உயிர். இதுதான் இராமேஸ்வரம்,

இதை ஸ்தலபுராணமாக உருவாக்கி, இதே எண்ணத்தால், ஒளி என்ற உணர்வு பெற்ற, துருவ நட்சத்திரத்தின் உணர்வைப் பெறச் செய்வதற்கு, இராமேஸ்வரத்தை அமைத்தார்கள். அங்கு அதிகாலை 4.00 மணியில் இருந்து, 6.00 மணிக்குள் துருவ நட்சத்திரத்தைப் பார்க்கலாம் என்பதற்காகக் கோவிலை அமைத்தார்கள்.

அதன் உணர்வை, ஒரு மண்டலம் (48 நாட்கள்) வளர்த்துக் கொண்டபின், நம் குடும்பத்தில் நமது மூதாதையர்களையோ, உடலை

விட்டுப் பிரிந்து சென்றவர்களையோ, விண் செலுத்தி, துருவ நட்சத்திரத்தின் ஈர்ப்பு வட்டத்தில் வாழும், சப்தரிஷி மண்டலத்துடன் இணைக்க முடியும். மூதாதையர்களின் உணர்வு நமக்குள் உண்டு. அதன் துணை கொண்டு,

**"எங்களுடன் வாழ்ந்து வளர்ந்த குலதெய்வமான உயிராத்மாக்கள், சப்தரிஷி மண்டலத்தில் கலந்து, உடலில் பெற்ற நஞ்சுகள் கரைந்து, பெருவீடு பெருநிலை அடைந்து, அழியா ஒளி சரீரம் பெறவேண்டும்"**

என்று, **பிறவி இல்லா நிலையை, அடையச் செய்யும் இடம் அது.**



சிறிது காலமே, மனித உடலில் வாழ்கின்றோம்.

இந்த மனித உடலில், மனதைக் குவித்தல் வேண்டும்.

அதாவது, மனதில், எல்லாக் குடும்பங்களும் நல்லது பெறவேண்டும், என்று எண்ண வேண்டும்.

இதைத்தான், **இராமேஸ்வரத்தில் இராமன் மணலைக் குவித்ததாக,**

**இராமாயணத்தில் காட்டினார்கள்**. இராமேஸ்வரத்தில், மனிதனுடைய பொக்கிஷம் அத்தனையும் உண்டு.

27 நட்சத்திரங்களின் சத்தை, சூரியன் எவ்வாறு பாதரசங்களாக மாற்றுகின்றதோ, அதே போன்று, 27 நட்சத்திரங்களின் சத்தைச் சூரியன் கவர்ந்து, இயக்க அணுவாக மாற்றியதை, ஜீவ அணுவாக்கி,

இந்த உடலை உருவாக்கியது, உயிர்.

**மனிதனான பின், 27 நட்சத்திரத்தையும் சேர்த்து, முழுமை அடையும் பக்குவத்தைத்தான், இராமேஸ்வரத்தில் காட்டினார்கள்.**

இராமேஸ்வரத்தில், 27 கிணறைக் காட்டி இருப்பார்கள். எது எது உணர்வுகள் ஊற்றெடுத்து, நமக்குள் ஒன்றாக்குகின்றது என்று இராமேஸ்வரத்தில் காட்டடப்பட்டது. நம் மனதைக் குவிக்கும் இடம் இராமேஸ்வரம்.

அங்கு நம் மூதாதையர்களை எண்ணி,

**"எங்களுடன் வாழ்ந்து வளர்ந்த, மூதாதையர்களின் உடலை விட்டுப் பிரிந்து சென்ற உயிராத்மாக்கள் அனைத்தும், சப்தரிஷி மண்டலத்தில் கலந்து, உடலில் பெற்ற நஞ்சுகள் கரைந்து, துருவ நட்சத்திரத்தின் ஈர்ப்பு வட்டத்தில் வாழவேண்டும்"**

**என அவர்களை விண்செலுத்தும் இடம் அது. மனிதன் ஒருவன் தான், அதைப் பெறமுடியும். கடைசி முடிவு.**

அணுக்களாகச் சேர்த்து, சூரியனாகி, பிரபஞ்சமாகி, பிரபஞ்சத்தில் உயிரணுவாகி, உயிரணு தோன்றியபின், ஒளியின் உடலாவதுதான் இறுதிநிலை. ஆகையால், முதாதையர்களை முறைப்படி விண் செலுத்தினால், அவர்கள் பிறவி இல்லா நிலை அடைகின்றனர். அவர்கள் முன் சென்றால், **அதை நாம்**

அனைவரும் எளிதில் பெற்று, நம் ஆன்மாவைப் புனிதப்படுத்தி, எளிதில் நாம் எல்லோரும், அங்கு (சப்தரிஷி மண்டலத்திற்கு) செல்லலாம். எமது அருளாசிகள்.





மாமகரிஷி ஈஸ்வராய குருதேவர் தபோவனம்
புஞ்சை புளியம்பட்டி - 638 459
ஈரோடு மாவட்டம்
தமிழ் நாடு
இந்தியா
தொலை பேசி - 04295 267318

http://omeswara.blogspot.in/